இன்றைய செய்தி நாளைய வரலாறு
முரசொலி
நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி
சனிக்கிழமை 19-04-2025

# வளர்ச்சியான மாநிலங்களே....

மாநில சுயாட்சி கேட்டால், அதனைப் 'பிரிவினைவாதம்' என்று 'புதிய நயினார்' புலம்புகிறார். புலியை விட புலிவேஷம் போடுபவர் தத்ரூபமாக ஆடுவார்கள் என்பதை நயினார் நாகேந்திரன் நிரூபித்துக் கொண்டிருக்கிறார்.

மாநில சுயாட்சி இன்று ஏன் தேவை என்பதை மாண்புமிகு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் பல்வேறு காலக்கட்டங்களில் தெளிவுபடுத்தி இருக்கிறார்.

1. இந்திய அரசமைப்புச் சட்டத்தில் இருக்கும் மாநிலப் பட்டியல் என்பதை மதிப்பதே இல்லை. அதில் இருக்கும் பொருள்கள் குறித்தும், அவர்களே சத்தமில்லாமல் சட்டமியற்றிக் கொள்கிறார்கள். சட்டமியற்றும் அதிகாரத்தை முடக்குவதன் மூலமாக மாநிலங்களின் கை, கால் அசைக்க முடியாத நிலையை உருவாக்கப் பார்க்கிறார்கள்.
2. கல்வி, சுகாதாரம், ஊரக வளர்ச்சி, நகர்ப்புற மேம்பாடு என அனைத்தையும் மாநிலங்கள்தான் முன்னெடுத்துச் செல்கின்றன. ஆனால் மாநிலங்கள் நினைப்பதைச் செய்ய முடியாத தடையை ஏற்படுத்துகிறது ஒன்றிய பா.ஜ.க. அரசு.
3. நிதி உரிமையைப் பறிக்கும் வகையில் வரி உரிமைகளைப் பறித்தார்கள். இழப்பீடு தருவதாக நடித்தார்கள். அந்த இழப்பீட்டையும் சில காலத்தில் நிறுத்தினார்கள். இப்போது, மாநில அரசுகள், ஒன்றிய அரசை நோக்கி பிச்சைப் பாத்திரம் ஏந்தி நிற்கும் காட்சியைத்தான் பார்க்கிறோம். ஒரு மாநிலத்துக்கு ஆக்ஸிஜனாக இருப்பது நிதி உரிமையே. இதனைப் பறிப்பது, மூச்சற்ற நிலையை உருவாக்குவதே ஆகும்.
4. மொழி, இன, பண்பாடு ஆகியவற்றின் தனித்தன்மைகளை உறுதிசெய்யும் வண்ணம் கல்வியை மீண்டும் மாநிலப் பட்டியலில் சேர்க்க வேண்டியது இன்றியமையாததாகும்.
5. 'நீட்' தேர்வானது மருத்துவக் கல்விக் கனவைச் சிதைப்பதாக இருக்கிறது. ஏராளமான மாணவர்கள் தற்கொலை செய்துள்ளார்கள். இந்தத் தேர்வு 'மோசடியானது' என்பதை சி.பி.ஐ. தாக்கல் செய்துள்ள குற்றப்பத்திரிக்கையே சொல்கிறது. உச்சநீதிமன்றத்தால் விசாரணைக்கு உட்படுத்தப்பட்ட தேர்வு இந்தத் தேர்வு. கோச்சிங் சென்டர்கள் கோடிகளைச் சம்பாதிக்க உருவாக்கப்பட்டதே இந்தத் தேர்வு என்று தொடர்ந்து எதிர்த்து வருகிறோம். ஆனால் அதனை நீக்க மறுக்கிறார்கள்.
6. 'மும்மொழிக் கொள்கை' என்ற போர்வையில் இந்தி மொழியைத் திணித்து, இந்தி பேசாத மக்களை இந்திய நாட்டில் இரண்டாம் தர மக்களாக மாற்றும் சூழ்ச்சி ஆகும்.
7. ஒன்றிய நிதிக் குழுவின் பரிந்துரையின் அடிப்படையில் மாநிலங்களுக்குப் பகிரப்படும் நிதியானது தமிழ்நாடு போன்ற பொருளாதாரத்தில் முன்னேறியுள்ள மாநிலங்களின் பங்களிப்பிற்கு ஈடாகத் தரப்படுவது இல்லை. நாம் பங்களிக்கக் கூடிய ஒரு ரூபாய் வரியில் 29 பைசா மட்டுமே நமக்கு நிதிப்பகிர்வாக அளிக்கப்படுகின்றது.
8. இயற்கைச் சீற்றங்களினால் தமிழ்நாடு பாதிக்கப்பட்ட போதெல்லாம்கூட, உரிய இழப்பீடுகள், தகுந்த ஆய்வு மற்றும் அளவீடுகள் செய்த பின்னரும், பல முறை வலியுறுத்தியும், வழங்கப்படவே இல்லை.
9. தமிழ்நாட்டு நாடாளுமன்ற உறுப்பினர்களின் எண்ணிக்கையை குறைக்கச் சதி செய்கிறார்கள். 39 பேர் இருக்கும் போதே அவர்களது பேச்சுகள், ஒன்றிய அரசின் மூடிய காதுகளைத் திறக்கவில்லை. 31 என ஆனால் என்ன ஆகும் எனச் சொல்லத் தேவையில்லை.
10. இன்றைய ஆளுநர் வந்தது முதல் தமிழ்நாட்டின் வளர்ச்சிக்குக் குழிதோண்டிக் கொண்டு இருக்கிறார். நாம் இயற்றிய சட்டமுன்வடிவுகள்மீது உரிய ஒப்புதல் வழங்காமல் காலம் தாழ்த்தி வந்தார். அவரது செயலை 'சட்டவிரோதம்' என்று உச்சநீதிமன்றமே தீர்ப்பளித்தபிறகும் அவர் திருந்தவில்லை. திருந்த மாட்டார். அவரது குணத்தை எந்தத் தீர்ப்பும் மாற்றமுடியாது. ஆளுநர் பதவியே தேவையில்லை என்பதுதான் நிரந்தரத் தீர்வாக அமையும்.

– இவைதான் மாநில சுயாட்சித் தீர்மானம் நிறைவேற்ற அவசர அவசியத் தேவைகளாக அமைந்திருந்தன. இதற்கு உரிய விளக்கத்தை முதலில் புதிய நயினார் விளக்க வேண்டும். அதன் பிறகு மற்ற விவாதங்களை நடத்தலாம்.

எந்தக் கேள்வி கேட்டாலும், 'அமித்ஷா தான் சொல்ல வேண்டும்' என்று சொல்லும் நயினார் அவர்கள், இதற்கான பதில்களையும் அமித்ஷாவிடம் கேட்டுச் சொல்லலாம்.

புதிய நயினார், புதிதாக இதனைச் சொல்லவில்லை. 'ஐம்பது ஆண்டுகளாக, பிரிவினைவாதம் என்ற குற்றச்சாட்டைத்தான் சொல்கிறார்கள்' என்று தி.மு.க. அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ்.பாரதி மிகச் சரியாகச் சொல்லி இருக்கிறார். கேட்டுக் கேட்டு புளித்துப் போன பழைய புலம்பல்தான் நயினார் புலம்பல்.

**"பிரிந்துபோகும் தன்மையுடன்கூடிய மாநில சுயாட்சியை நாம் கேட்கவில்லை" என்பதை (18.2.1978) தொடர்ந்து தெளிவுபடுத்தினார் கலைஞர். "தேசிய நீரோட்டமென்பது டெல்லிப் பட்டணத்தை சர்வாதிகாரக் கோட்டையாக அமைத்துக் கொண்டு மாநிலங்களின் உரிமையைப் பறிப்பது என்றால், அந்த நீரோட்டத்தில் விழுந்து, மிதந்து எங்கேயோ ஒதுங்கிவிட தி.மு.க. தயாராக இல்லை. 'வேற்றுமையில் ஒற்றுமை' காண்பதற்குப் பதிலாக 'எல்லாவற்றையும் ஒன்றாக்குகிறோம்' என்ற பெயரால் மொழி, கலை, இலக்கியம், கலாச்சாரம் போன்ற தனித்தன்மைகளை உருக்குலைப்பதுதான் தேசிய நீரோட்டமென்றால் அந்த நீரோட்டத்தில் எதிர் நீச்சலடிக்கத்தான் தி.மு.க. துணியும். நாடு, கேடுபுகக் கூடாது ஒற்றுமையின்மையால்! நமக்கு அதில் அக்கறையுண்டு! பகை நுழையத் துளி இடமும் தந்திடலாகாது. அப்படிப்பட்ட நேரத்தில் துள்ளிவரும் வேலாக, ஆவேசத்தை அள்ளிவரும் வாளாக தி.மு.க. வடிவெடுக்கும். இவைதான் தேசிய நீரோட்டமென்றால் அட்டியில்லை ஒப்புதவற்கு" என்று எழுதினார் (12.8.1977) கலைஞர்.**

**'விழுதுகள் வலிவடைவதால் ஆலமரத்தின் அடிமரம் வலுவிழந்து விடுவது இல்லை. விழுதுகள் சேர்ந்துதான் ஆலமரம் பலமுள்ளதாகத் திகழ்கிறது. அதுபோல மாநிலங்கள் அதிக அதிகாரம் பெற்றுத் திகழ்வது மத்திய அரசை வலுப்படுத்தும் வகையில்தான் அமையும், அமைய வேண்டும். நாங்கள் கேட்பது சுயாட்சியே தவிர தன்னாட்சியுமல்ல, சுதந்திரமுமல்ல" என்பதை (16, 27.10.1976 முரசொலி) தெளிவுபடுத்தினார் கலைஞர்.**

இன்றைய முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள், இதனைத் தெளிவுபடுத்தி இருக்கிறார்கள். "வளர்ச்சியான மாநிலங்களே, வலிமையான இந்தியாவை உருவாக்கும்" என்று சொல்லி இருக்கிறார் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

ஒருவிதத்தில் சொன்னால், 'இது இந்தியாவை வலிமைப்படுத்தும் குரலே' தவிர, இந்தியாவைப் பிரிக்கும் குரல் அல்ல. பா.ஜ.க.வின் எதேச்சதிகாரம் இந்தியாவை பலவீனப்படுத்தும். மாண்புமிகு முதலமைச்சரின் மாநில சுயாட்சி, இந்தியாவை வலிமைப்படுத்தும்.

●●

முதல்வர் மு.க.ஸ்டாலின் தலைமையேற்று வெளியிடுகிறார்! திராவிட அறநெறியாளர்

# தமிழவேள் பி.டி.ராஜன் - 'வாழ்வே வரலாறு' நூல்!

## அமைச்சர் – முனைவர் பழனிவேல் தியாகராசன் முன்னெடுப்பில் எழில்மிகு விழா!

**சென்னை, ஏப்.19-**

**திராவிட அறநெறியாளர் தமிழவேள் பி.டி.ராஜன் - 'வாழ்வே வரலாறு' நூல் வெளியீட்டு விழா 22.4.2025-செவ்வாய்க்கிழமை மாலை 6 மணியளவில் சென்னை கலைவாணர் அரங்கத்தில் நடைபெறுகிறது.**

**இவ்விழாவில் தகவல் தொழில் நுட்பவியல் மற்றும் டிஜிட்டல் சேவைகள் துறை அமைச்சர் முனைவர் பி.டி.ஆர். பழனிவேல் தியாகராசன் வரவேற்புரையாற்றுகிறார்.**

**கழகத் தலைவர், முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் விழாவிற்கு தலைமையேற்று நூலை வெளியிட்டு சிறப்புரையாற்றுகிறார்.**

சென்னை உயர்நீதிமன்ற மேனாள் நீதியரசர் சி.டி.செல்வம் முதல் நூலை பெற்றுக் கொள்கிறார்.



இவ்விழாவில் டி.வி.எஸ். மோட்டார்ஸ் தலைவர் வேணு சீனிவாசன், மூத்த பத்திரிகையாளர் 'இந்து' என். ராம் ஆகியோர் வாழ்த்துரை வழங்குகின்றனர்.

மீனாட்சி சுந்தரேசுவரர் திருக்கோயில் அறங்காவலர் குழுத் தலைவர் ருக்மணி பழனிவேல் ராஜன் நன்றி கூறுகிறார்.

### அமைச்சர் - முனைவர் பழனிவேல் தியாகராசன் வேண்டுகோள்!

இவ்விழாவினைச் சிறப்புற ஏற்பாடு செய்து நடத்திடும் தகவல் தொழில்நுட்பத்துறை அமைச்சர் முனைவர் பழனிவேல் தியாகராசன்,

"ஒருங்கிணைந்த சென்னை மாகாணத்தின் முதலமைச்சராகவும், நீதிக்கட்சியின் இறுதித்தலைவராகவும் இருந்த, எங்கள் தாத்தா 'திராவிட அறநெறியாளர் தமிழவேள் பி.டி.ராஜன் வாழ்வே வரலாறு' எனும் இந்த வரலாற்றுக் கருவூலத்தை அச்சு வடிவில் வெளியிட தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் மீண்டும் இசைவு தந்திருப்பது பெரும் மன நெகிழ்வைத் தருகிறது.

என்றும் என்னுள் வாழ்கின்ற எனது தந்தையார் - பண்பாளர் பி.டி.ஆர். பழனிவேல் ராஜன் அவர்களும் இத்தருணத்தில் இருந்திருந்தால் மிக்க மகிழ்வடைந்திருப்பார் என்பதில் எனக்கு ஐயமில்லை.

எனது மூதாதையரின் புகழ் வாழ்வை போற்றும் கடமையை இயன்றவரை நிறைவேற்றியுள்ளேன் என்கின்ற உணர்ச்சிப் பெருக்கோடு இந்த நூல் வெளியீட்டு விழாவிற்கு உங்களை எல்லாம் அழைப்பதில் பெரு மகிழ்ச்சி அடைகிறேன்."

- எனக் குறிப்பிட்டுள்ளார்.

# சீர்காழி தொகுதி கொள்ளிடம் வலது கரை சாலை சீரமைக்க நடவடிக்கை எடுக்கப்படும்!

## சட்டப்பேரவையில் கவனஈர்ப்பில் அமைச்சர் துரைமுருகன் உறுதி!

**சென்னை, ஏப்.19-**

**சீர்காழி தொகுதி கொள்ளிடம் வலதுகரை சாலையை சீரமைக்க நடவடிக்கை எடுக்கப்படும் என்று சீர்காழி மு.பன்னீர் செல்வம் கொண்டுவந்த கவன ஈர்ப்பில் நீர்வளத்துறை அமைச்சர் துரைமுருகன் உறுதிபட தெரிவித்தார்.**

இது பற்றிய விவாதம் வருமாறு:-

**மு. பன்னீர்செல்வம்:** சீர்காழி தொகுதி கொள்ளிடம் வலது கரை சாலையை சீரமைக்க வேண்டியது குறித்து நீர்வளத் துறை அமைச்சர் அவர்களின் கவனத்தை ஈர்த்து அமைகிறேன்.

**அமைச்சர் துரைமுருகன்:** விவர அறிக்கை ஒன்று உறுப்பினர் அவர்களின் மேசையின் மேல் உள்ள சிறுகணினியில் பதிவேற்றம் செய்யப்பட்டு உள்ளது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**மு.பன்னீர்செல்வம்:** விவர அறிக்கையை முழுமையாக படித்துப் பார்த்தேன். தஞ்சை மாவட்டம் மற்றும் மயிலாடுதுறை மாவட்டத்தில், அப்பகுதி முழுமைக்கும் புனரமைக்கும் திட்டம் ஒன்றும் கால்வாய்களில் தானியங்கி நுண்ணீர்ப் பாசன திட்டம் செயல்படுத்த ஒரு மிகப் பெரிய தஞ்சை மற்றும் மயிலாடுதுறை மாவட்டத்தில், ஆற்றுப் பகுதி முழுமைக்கும் ஒரு புனரமைக்கும் திட்டம் ஒன்றும், கால்வாய்களில் தானியங்கி நுண்ணீர்ப் பாசன திட்டத்தை செயல்படுத்த ஒரு விரிவான அறிக்கை திட்டம் செயல்படுத்த விரிவான இறுதித் திட்ட அறிக்கை தயாரிக்க SECON Private Limited என்ற company க்கு வழங்கப்பட்டிருக்கிறது. அதற்காக அமைச்சர் அவர்களுக்கு நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

இருப்பினும், கொள்ளிடம் வலது கரை சாலைக்கு மாற்றாக பனங்காட்டாங்குடியிலிருந்து புத்தூர் வரை ஒரு சாலை மாற்று சாலை இருப்பதாக விவர அறிக்கையில் அமைச்சர் அவர்கள் தெரிவித்திருக்கிறார்கள். அந்தச் சாலையைச் சுற்றிச் செல்ல வேண்டுமென்று சொன்னால் கிட்டத்தட்ட 10 ஊராட்சிக்கு மேற்பட்ட 40 கிராமங்கள் உள்ளிட்ட, கிராம மக்கள், பள்ளி மாணவர்கள், கல்லூரி மாணவர்கள், வேலைக்குச் செல்வோர், விவசாயிகள் தோட்டக்கலையை பயன்படுத்தி செல்லுகிற விவசாயிகள் அவர்கள் கொண்டு செல்கிற காய்கறிகளையெல்லாம் கொள்ளிடத்திற்கு வந்து சிதம்பரம் செல்ல வேண்டும், சீர்காழி செல்ல வேண்டும் மயிலாடுதுறை செல்ல வேண்டும்.

இதற்காக இந்த சாலை ஒன்று மட்டும்தான் இவர்களுக்கு குறைந்த தூரத்திலே உள்ள சாலை. அந்தச் சாலையை சீரமைத்துக் கொடுப்பதற்கு அமைச்சர் அவர்கள் ஏற்கெனவே 2010 ஆம் ஆண்டு அமைச்சராக இருக்கிற பொழுதே, அவர்கள் ரூ.200 கோடி செலவில் அந்தக் கரையை பலப்படுத்தி சாலை அமைத்துக் கொடுத்தார்கள்.

அந்தச் சாலை முழுமையாக மக்கள் பயன்பாட்டிற்குரிய சாலை யாகும். எனவே, அந்தச் சாலையை சீரமைத்துக் கொடுக்க வேண்டும் என்று நீர்வளத் துறை அமைச்சர் அவர்களின் கவனத்தை ஈர்த்து அமைகிறேன்.

**அமைச்சர் துரைமுருகன்:** உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டிருக்கிற அணைக்கரை முதல் காட்டூர் வரை 60 கி.மீ. நீளத்திற்கு வேளாண்மைத் திட்டத்தின்கீழ் 2021-ஆம் ஆண்டு சாலைவழி அமைக்கப்பட்டது. ஆனால், மழையின் காரணமாக அது பழுதுபட்டிருக்கிறது. தற்போது, 60 கி.மீ. நீளத்திற்கு புதிதாக சாலை போடுவதற்கு சுமார் 70 கோடி ரூபாய் ஆகும் என்று உத்தேசிக்கப்பட்டுள்ளது. இந்த 70 கோடி ரூபாயில் அமைக்க உத்தேசிக்கப்பட்டுள்ள மொத்த தூரத்தில், 30 கி.மீ. தூரம்தான் உறுப்பினர் அவர்களுடைய தொகுதிக்குள் வருகிறது; அதனுடைய மதிப்பீடு 35 கோடி ரூபாயாகும். ஆகையினால், உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டதைப்போல, தஞ்சை, மயிலாடுதுறை ஆகிய மாவட்டங்களில் கொள்ளிடம் ஆற்றுப் பகுதி முழுவதையும் புனரமைக்கவும் மற்றும் கால்வாய்களில் தானியங்கி தண்ணீர் பாசனத் திட்டத்தை செயல்படுத்தவும் அரசு முடிவு செய்திருக்கிறது. அதை எப்படி அமல்படுத்தலாம் என்பது குறித்து DPR தயாரிப்பதற்காக 9.96 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்து, வழங்கப்பட்டுள்ளது. அவர்கள் DPR தயாரித்துக் கொண்டிருக்கிறார்கள்.



எனவே, உறுப்பினர் அவர்கள் சொன்னதைப்போல, நடவடிக்கை எடுக்கிற வரையில், கொள்ளிடம் கரை வந்து, மாற்றுச் சாலையாக பனங்காட்டான்குடி முதல் புத்தூர் வரையுள்ள சாலையை பொதுமக்கள் பயன்படுத்துகிறார்கள். DPR கிடைத்தவுடன், மேற்படி திட்டம் குறித்து விரைவில் முடிவெடுக்கப்படும்.

**மு.பன்னீர்செல்வம்:** அந்தச் சாலையை பயன்படுத்துகிற மக்கள், அகரஎலத்தூர், வடரங்கம், மாதிரவேளூர், சோதியக்குடி, கோபாலசமுத்திரம், ஆனைக்காரன் சத்திரம், மகேந்திரப் பள்ளி, காட்டூர் வரை செல்கின்ற அந்த ஊராட்சிகளைச் சேர்ந்த மக்கள் அந்தச் சாலையைத் தான் பயன்படுத்தி வருகிறார்கள். அந்தச் சாலை குண்டும், குழியுமாக மக்கள் நடக்கவே முடியாத அளவிற்கு மோசமாக உள்ளது. எனவே, அந்தச் சாலையை சமன் செய்து, ஓர் ஓரடுக்கு சாலை யாகக்கூட போட்டுக் கொடுக்கலாம். அமைச்சர் அவர்கள் ஒரு மூத்த அமைச்சர்; தலைவர் கலைஞர் அவர்களுடைய ஆட்சிக் காலத்தில் அமைச்சராக இருந்தவர்; நம்முடைய தளபதியார் அவர்களுடைய ஆட்சிக் காலத்தில் அமைச்சராக இருக்கிறார்; வருங்காலத்தில் நம்முடைய இளம் தலைவர் துணை முதலமைச்சர் உதயநிதி அவர்களுடைய ஆட்சிக் காலத்திலும் அமைச்சராக இருக்கப்போகிறவர். இந்தச் சாலையை முழுமையாக ஓரடுக்கு சாலையாகப் போட்டுக் கொடுக்க வேண்டும் என்று கேட்டு, அவருடைய கவனத்தை ஈர்த்து அமைகிறேன்.

பேரவைத் தலைவர்: நீங்கள் எல்லாவற்றையும் சரியாகச் சொன்னீர்கள். அவர் ஓர் இளமையான அமைச்சர் என்று கூறியிருக்கலாமே! மூத்த அமைச்சர் என்று கூறியதுதான் தவறு.

**அமைச்சர் துரைமுருகன்:** உறுப்பினர் அவர்கள், மிகவும் பழைய உறுப்பினர். அவர், ஒருமுறை சவால்விட்டு ஜெயித்தவர். ஆகையினால், அவர் சொல்வதில் நியாயம் இருக்கும் என்பதை நான் உணர்கிறேன். உறுப்பினர் பன்னீர்செல்வம் அவர்கள், தவறாக சொல்லக்கூடியவர் அல்லர். அந்தச் சாலை நீர்வளத் துறையின்கீழ் வருமென்றால், அதை அமைத்துக் கொடுப்பதற்கு நான் ஏற்பாடு செய்கிறேன். அது எங்கள் துறையின்கீழ் வரவில்லையென்றால், பொதுப் பணித் துறை அமைச்சர் எ.வ.வேலு அவர்கள், அதில் கவனம் செலுத்தி போட்டுத் தருவார்கள்.

இவ்வாறு விவாதம் நடைபெற்றது.




# தி.மு.க. இளைஞர் அணி

கலைஞர் 100 1924 - 2023

## சட்டமன்றத் தொகுதி வாரியாக பாக இளைஞர்களுக்கு சமூக வலைத்தளப் பயிற்சி

## இளைஞர் அணிச் செயலாளர் உதயநிதி ஸ்டாலின் அறிவிப்பு

கழகத் தலைவர் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களது அறிவுறுத்தலின் பேரில், பாகத்திற்கு ஓர் இளைஞரைத் தேர்வு செய்து, சட்டமன்றத் தொகுதி வாரியாக சமூக வலைத்தளப் பயிற்சி வழங்கி வருகிறோம். மண்டலம் 1–இல், ஒரு சட்டமன்றத் தொகுதிக்கும் மண்டலம் 9–இல், மூன்று சட்டமன்றத் தொகுதிகளுக்கும் சமூக வலைத்தளப் பயிற்சி, கீழ்க்காணும் நாட்களில் நடைபெற இருக்கிறது. அதன் விவரம் வருமாறு :

| நாள் | நேரம் | மண்டலம் | சட்டமன்றத் தொகுதி | இடம் |
|---|---|---|---|---|
| 19.04.2025 சனிக்கிழமை | மாலை 4.00 மணி | 1 | அண்ணா நகர் | அண்ணா நகர் சட்டமன்ற உறுப்பினர் அலுவலகம், பூந்தமல்லி நெடுஞ்சாலை, அமைந்தக்கரை |
| 19.04.2025 சனிக்கிழமை | காலை 10.00 மணி | 9 | தூத்துக்குடி | கலைஞர் அரங்கம், தூத்துக்குடி |
| 19.04.2025 சனிக்கிழமை | மாலை 4.00 மணி | | கோவில்பட்டி | சௌபாக்கியா மஹால், கோவில்பட்டி |
| 26.04.2025 சனிக்கிழமை | காலை 10.00 மணி | | விளாத்திகுளம் | ஜி.வி.மஹால் விளாத்திகுளம் |

அந்தந்த சட்டமன்றத் தொகுதி பாகங்களில், இப்பயிற்சிக்காகத் தேர்வு செய்யப்பட்டுள்ள இளைஞர்கள் தவறாமல் பங்கேற்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

"அன்பகம்"
தேனாம்பேட்டை
சென்னை–18
நாள் : 16-04-2025

உதயநிதி ஸ்டாலின்
செயலாளர்,
தி.மு.க. இளைஞர் அணி